(1)

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075261

C

1. District : திருவாரூர் மாவட்டம்   PS: V&AC காவல்நிலையம்   Year 2020 ஆண்டு   FIR No.: 07/2020 மு.த.அ. எண்   Date: 10.12.2020 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended on 2018   Sections பிரிவுகள்: U/s. 7 of PC Act 1988 as amended on 2018

   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல் D/O —   Date to : நாள் வரை 09.12.2020 - 12.00 hrs over cellphone - 13.15 hrs - No office

   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை 10.12.2020 - 08.13 hrs - over cell phone

   (b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் D/R   Time நேரம் : written complaint received - 10.12.20 - 09.45 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time நேரம் : FIR registered. 10.12.20 09.30 hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வடமேற்கு - 2 km & கிழக்கு - 26 km

   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி விவேகா ரைஸ்மில், திருவாரூர் மற்றும் மாவட்ட மாசு கட்டுப்பாட்டு வாரியம், நாகப்பட்டினம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P S :   District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. துரைசாமி   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முத்துசாமி நாயுடு

   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 60/2020   (d) Nationality : நாட்டினம்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில்   (g) Address முகவரி No-26, சாமி மடத்தெரு திருவாரூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. தனராஜ், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் நாகப்பட்டினம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது:

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் திரு. B.V.நந்தகோபால் ஆகிய நான் 10.12.2020ம் தேதி காலை 08.45 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு. M.துரைசாமி என்பவர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் M.துரைசாமி, த/பெ.முனுசாமி நாயுடு, நம்பர்.26, சாமிமடத்தெரு, திருவாரூர். பெறுநர் : உயர்திரு காவல் துணை கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். அய்யா, நான் எனது குடும்பத்துடன் திருவாரூர் சாமிமடத்தெருவில் வசித்து வருகிறேன். நான் திருவாரூர் விளமல் மெயின் ரோட்டில் நிவேதா ரைஸ்மில் என்ற பெயரில் ரைஸ்மில் 1993-லிருந்து நடத்தி வருகிறேன். எங்களது ரைஸ்மில்லுக்கு ஒவ்வொரு வருடமும் நீர் மற்றும் காற்று மாசுக்கட்டுப்பாட்டு இசைவாணையினை (Consent order) மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் புதுப்பிக்க வேண்டும். கடைசியாக பெற்ற ஆணை கடந்த 31.03.2020-ந் தேதியன்று முடிவடைந்த நிலையில் இதை புதுப்பிப்பதற்காக கடந்த 17.03.2020-ந் தேதி ரூ.11,200/-க்கான Indian Overseas Bank கேட்பு வரைவோலை எண்.635953 எடுத்தும், அத்துடன் மேற்படி ஆணையினை புதுப்பித்து தருமாறு திருவாரூர் மற்றும் நாகை மாவட்டத்தினை கண்காணிக்கும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், நாகப்பட்டினம் அவர்களுக்கு பதிவு தபாலில் கடிதமும் அனுப்பினேன். அதன் பிறகு ஆணையினை புதுப்பிக்கப்பட்டுள்ளதா என்பதனை

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10/12/20

10/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B.V. நந்தகோபால்
Rank: நிலை ...................... No. எண் ......
காவல் துணை கண்காணிப்பாளர்
V&AC, திருவாரூர்.

இணையதளத்தில் பார்த்ததில் எந்த விபரமும் இல்லாததால் கடந்த 20.08.2020 தேதி நாகப்பட்டினத்திற்கு நான் சென்று மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.தனராஜ் அவர்களை அவரது அலுவலக அறையில் பார்த்தேன். அப்போது அவர் 5 வருடத்திற்கு புதுப்பித்தால் அதன் மூலம் 10 வருடத்திற்கு புதுப்பித்தற்கான பலனை அரசு தருகிறது. அதனால் 5 வருடத்திற்கு பணத்தை கட்டி புதுப்பித்துக்கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தினார். அதனால் 20.08.2020-ந் தேதியே ரூ.44,800/-க்கு TAMILNADU MERCANTILE BANK கேட்பு வரைவோலை எடுத்தும், அதனுடன் எங்களது ரைஸ் மில்லுக்கான மாசுக்கட்டுப்பாட்டு ஆணையினை 10 வருடங்களுக்கு அதாவது 2030 வரை புதுப்பித்து தருமாறு கடிதம் கொடுத்தேன். இந்த பணம் கட்டியதற்கு ரசீது வழங்கினார்கள். அந்த ரசீது எண்.91214 ஆகும். ஆனால் இவ்வாறு உரிய தொகை செலுத்தியும், எங்களது உரிமம் புதுப்பிக்கப்படாததால் நேற்று 09.12.2020-ந் தேதி மதியம் சுமார் 12.00 PM மணியளவில் மேற்படி திரு.தனராஜ் அவர்களை அவரது செல்போனில் அழைத்து பேசினேன். அதற்கு அவர் பணம் கொடுத்தால்தான் வேலை நடக்கும் நேரில் வாருங்கள் பேசுவோம் என்று கூறினார். அதனால் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் மேற்படி விபரங்களை கூறினேன். அதன்பேரில் DSP அவர்கள் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.தனராஜ் அவர்களை நேரில் சந்தித்து பேசும் போது உரையாடலை பதிவு செய்யுங்கள் என்று கூறி அதற்கான ரெக்கார்டரை என்னிடம் கொடுத்து என்னுடன் காவலர் திரு.ஜெயராமன் என்பவரை அனுப்பினார்கள். அதன்பேரில் 09.12.2020-ந் தேதி மதியம் 01.15 PM மணியளவில் நாகப்பட்டினம் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.தனராஜ் அவர்களை அவரது அலுவலக அறையில் சந்தித்து மேற்படி உரிமம் புதுப்பித்தல் தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர் ஒரு வருடத்திற்கு 10 என பணம் வாங்கிவிட்டுதான் உரிமம் புதுப்பிக்கிறோம். நீங்கள் 10 வருடத்திற்கு ஆணையினை புதுப்பிக்க கோரியிருப்பதால் வருடத்திற்கு 10 என 10 வருடத்திற்கு கணக்குப்பண்ணி பணம் கொடுங்கள் உரிமத்தை புதுப்பித்து தருகிறேன் என்று கூறினார். நாளை 10.12.2020-ந் தேதி எனது மில்லுக்கு வருவதாகவும், அப்போது அவர் கேட்ட பணத்தை தரவேண்டும் என்றும் கூறினார். மேலும் எப்போது மில்லுக்கு வருகிறார் என்பதை போனில் தகவல் சொல்வதாக கூறினார். இந்த உரையாடலை DSP அவர்கள் கொடுத்த ரெக்கார்டரில் பதிவு செய்து திருவாரூர் வந்து DSP அவர்களிடம் கொடுத்தேன். அந்த உரையாடலை ரெக்கார்டரில் கேட்டுவிட்டு கையூட்டு தொகை எவ்வளவு என தெளிவாக இல்லை என்பதால் மீண்டும் சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.தனராஜ் அவர்கள் பேசினால் எவ்வளவு தொகை என்று கேட்டு தெரிந்துவிட்டு அந்த தொகையை தயார் செய்துகொண்டு புகார் கொடுக்க வரும்படி என்னை அறிவுறுத்தினார்கள். இன்று காலை 10.12.2020-ந் தேதி 08.23 AM மணியளவில் மேற்படி திரு.தனராஜ் சார் அவர்கள் அவரது செல்போன் எண். 8056042197 என்ற எண்ணில் இருந்து என்னை அழைத்து இன்று மதியம் சாப்பாட்டிற்கு பிறகு எனது ரைஸ்மில்லுக்கு அங்கே வருவதாகவும், வந்த உடன் அவருக்கு ரூ.40,000/- தொகையை நான் கொடுக்க வேண்டும் என்றும் அவ்வாறு கொடுத்தால் வெள்ளிக்கிழமை புதுப்பிக்கப்பட்ட ஆணையினை பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறினார். மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.தனராஜ் அவர்கள் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணத்தை எனக்கு கொடுக்க விருப்பம் இல்லை. அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.40,000/- எடுத்து வந்துள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்ட மேற்படி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.தனராஜ் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் எனது ரைஸ்மில்லின் கடந்த ஆண்டுக்கு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் பெறப்பட்ட காற்று, நீர், மாசு கட்டுப்பாட்டு ஆணைகள் (எண்.1908221584877/06.03.2019 (Air), எண்.1908121584877/06.03.2019 (Water), extension order No.TNPCB/P&D/2020/01.07.2020), 17.03.2020-ந் தேதி மற்றும் 20.08.2020-ந் தேதி ஆணையினை புதுப்பிக்க கட்டண தொகை செலுத்தியதற்கான ரசீதுகள், கேட்பு வரைவோலை நகல்கள் அதற்கு நான் கொடுத்த கடிதங்கள் ஆகியவற்றை இணைத்துள்ளேன். Sd (M.துரைசாமி) 10-12-2020 அய்யா மேற்படி புகாரை 10.12.2020-ந் தேதி காலை 08.45

மணியளவில் பெற்றும், முதல் விசாரணை செய்தும் இந்தப் புகார் மீது காலை 09.30 மணியளவில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 07/2020 ச/பி 7 of PC Act 1988 as amended 2018 ன் படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. Sd (B.V. நந்தகோபால்) 10/12/2020 DSP, V&AC, TVR.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடன் 09.12.2020-ந் தேதி மேற்படி மனுதாரர் மற்றும் எதிரிக்கு இடையே நடைபெற்ற உரையாடல் பதிவு உள்ள CD ஆகியவற்றை முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

B.V. நந்தகோபால் 10/12/2020

துணை காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருவாரூர்.